RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2526

OPEN ACCESS

# மணிமேகலை புதுமை காப்பியம்

கா. பிரபா ஜோஸ்லின் [அ, *]

[அ] தமிழ்த்துறை, புனிதஜான்ஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, அம்மாண்டி விளை, கன்னியாகுமரி மாவட்டம், இந்தியா

# Manimehalai Puthumai Kapiyam

C. Prapha Joselin [a, *]

[a] Department of Tamil, St. John's Art and Science College, Ammandivilai Kanniyakumari District, India

* Corresponding Author: prabhajoslin1975@gmail.com

Received: 08-01-2025
Revised: 28-03-2025
Accepted: 02-04-2025
Published: 13-04-2025

Check for updates

**ABSTRACT**

Mani Mehalai, which dates back to the second century A.D., was created by Satan as a new invention. The woman proudly proclaims that she is a woman-first Kaviyam by naming the Kaviyam as Mani Mehalai and Mani MehalaiBhadua. He lists the revolutions that Mani Magayal has made and makes it clear that age is not a barrier to innovation

**Keywords:** Naming of Manimegalai and charitable works

## முன்னுரை

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை பெண்பெருமை பேசும் காப்பியமாக திகழ்கிறது ஒவ்வொரு சூழலிலும் பல இன்னல்களை அடைந்தாலும் அதிலிருந்து மீண்டு வந்து புத்தப் பிக்குணியாகி பல அறச்செயல்களைச் செய்து புதுமை படைக்கிறாள் என்பதை ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது

## மணிமேகலைக்கு பெயரிடுதல்

மணிமேகலையின் சிறப்பானது சிலப்பதிகாரத்திலேயே பெயரிடுவதில் இருந்து தொடங்குகிறது கோவலனின் முன்னோர்களை கடல் பயணத்தின்போது காப்பாற்றிய மணிமேகலா தெய்வத்தின் பெயரை மணிமேகலைக்கு இடுவதை

உன் பெரும் தானத்துறுதி ஒழியாது

துன்பம் நீக்கித்துயர் கடலொழி கென

பெயர்த்து விழுமந்தீர்த்த

எங்குல தெய்வப்பெயர் ஈங்கிடுகென" (சிலம்பு மதுரைக்கா. அடைக்கலக் காதை வரிகள் 33 36)

என்பதை அறிய முடிகிறது மணிமேகலை பிறப்பில் கணிகைகுல பெண்ணாக இருப்பினும் உரிமையால் கண்ணகியின் மகளாக விளங்குவதை

"மாபெரும்பத்தினி ---

மகள் மணிமேகலை

அருந்தவபடுத்தல் அல்லது யாவதும்

திருந்தா செய்கைதீத் தொழில்படாள்

(ஊரலர் உரைத்த காதை வரி 55 57)

என்பதை இவ்வரிகள் தெளிவுபடுத்துகிறது இதனை மாதவிதன் தோழியாகிய சுதமதிக்கு கூறுவதை காணமுடிகிறது.

## தெய்வத்தின் செயல்

மணிமேகலை சிறப்பான பெண் என்பதை தேர்ந்த மணிமேகலா தெய்வம் அவளைவான் வழியே எடுத்துச் செல்கிறது. (முன்னீர் வழக்கம் மகடூஉ வோடில்லை தொல். பொ. 34)

கடல் வழிப்பயணத்தில் பெண்களை கப்பலில் அழைத்துச் செல்லாத அக்காலத்திலேயே பெண்ணை வான் வழியே கொண்டு ஒரு புதுமையை படைத்துள்ளார் சாத்தனார் மட்டுமன்றி அவளுக்கு பிற்காலத்தில் மந்திரங்களால் பயன் விளையும் என்பதை அறிந்து மூன்று மந்திரங்களையும் கொடுக்கிறது.

விளைபொருள் உரையார வேற்றுரு எய்தவும்

அந்தரம் திரியவும் ஆக்கும் மிவ்வருந்திறன்

மந்திரம் கொள்கென (மந்திரம் கொடுத்த காதை 80 82) மேலும்

மக்கள் யாக்கை உணவின் பிண்டம்

இப்பெரும் மந்திரம் அரும்பசி அறுக்கும்என

(மந்திரம் கொடுத்த காதை 90 91)

வேற்றுறு எடுத்தல் அந்தரம் திரிதல் பசிப்பிணி அறுத்தல் என்பவற்றை கொடுக்கிறது.

## அமுதசுரபியுடன் புகாருக்கு வரல்

மந்திரம் பெற்ற மணிமேகலை ஆபத்திரன் கை அமுத சுரபியினை கோமுகி பொய்கையிலிருந்து சிந்தா தேவியுடன் வலம் வந்து பெற்றுக் கொள்கிறாள் மட்டுமின்றி வான்வழியே தனியாக திரும்பி மாதவிசுத மதியிடம் வந்து சேர்கிறாள். இதனால் உணவின்றி துன்புற்றோருக்கு உணவளித்து மகிழ்கிறாள் மணிமேகலை. பசிவந்திட பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி இவ்வுலகில் வாழ உணவு உடை உறையுள் ஆகிய முக்கிய தேவைகளுள் உணவில்லை எனில் எத்தகைய துன்பத்தினை அடைவார். என்பதனை,

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்வி பெரும்புணை விடூஉம்

நான் அணிக்களையும் மணெணெழில் சிதைக்கும்

பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவி" (பாத்திரம்பெற்றகாதை 76 80)

என்கிறது மணிமேகலை உடலுக்கு உணவு எத்தனை இன்றியமையாதது என்பதனை 'திருமூலரும் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தனே' என்கிறார். முறுக்கு மீசை பாரதியும்

தனி ஒருவனுக்கு உணவினைஎனில் ஜகத்தினை அழித்திடுவோம் பாரதியார் பாடல்கள்பா 17 என்கிறார்.

மணிமேகலையும் இதனை

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்நெறி வாழ்க்கை
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" (பாத்திரம்பெற்றகாதை 93 96 )

உணவு கொடுத்தவர் உயிரையே கொடுத்தவருக்கு ஈடாவர் என்கிறது.

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்துடன் நீரே
நீரும் நிழலும் புணரியோர் ஈண்டு
உடம்பு உயிரும் படைத்தி சினோரே"(புறம்8வரி 19 23)

இவ்வுலக உயிருக்கு உணவு கொடுத்தால் உயிரையே கொடுத்தவர். உணவு என்று சொல்லப்படுவது நிலமும் நீருமாகும் அதனை உருவாக்கியவர் உடம்பினையும் உயிரையும் படைத்தவர் ஆவர் என்கிறார் குடபுலவியனார்.

## பசிப்பிணி போக்குதலே தலை சிறந்த அறம்

அமுதசுரபி ஆகிய அரிய பாத்திரத்தினால் பசிப்பிணி அகலும் பசிப்பிணி போக்குவதே தலை சிறந்த அறம் என்பதனை,

"அறமெ மனப்படுவது யாதென கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிற் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும்"
(ஆ புத்திரனோடு மணிப்பல்லவம் அடைந் தகாதை 228 231)

என்பதிலிருந்து ஆபுத்திரன் கை அமுதசுரபியினை மணிமேகலையின் கையில் கொடுத்து பசிப்பிணியாற்றும் மருத்துவனாக்கி அவளை உயர்த்துகிறார் சாத்தனார்.

## கள்ளுண்ணுதல் போன்றவற்றை எதிர்த்தல்

உணவிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் இக்காப்பியம் தீய ஒழுக்கங்கள் சிலவற்றையும் பட்டியலிட்டு காட்டுகிறது. கள் உண்பதை மகிழ்வான நிகழ்வாகக் கருதும் அக்காலத்திலேயே கள்ளால் மக்கள் உயிருக்கு ஏற்படும் இன்னல்களை விவரிக்கிறது மணிமேகலை. கப்பல் கவிழ்ந்ததால் நாகர் தலைவனிடம் அகப்பட்டு கொண்ட சாதுவன் அவர்களின் மொழியிலேயே பேசியதும் நாகர தலைவன் மகிழ்ந்து கள்ளும் புலாலும் பெண்ணும் வேண்டுமளவிற்கு கொடுங்கள் என்கிறான் அதனை சாதுவன் மறுக்கிறான் உடனே குறுமகன்,

பெண்டிரும் உண்டியும் இன்றெனில் மாக்கட்கு
உண்டோ ஞாலத்து உறுபயன்"

(ஆதிரை பிச்சையிட்ட காதை 80 81)

என்று வினவிய குறுமகனுக்கு

“மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்

கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்” (மேலதுவரி 84 85)

என்று சாதுவன் குறுமகனுக்கு கள்ளினை விலக்குதலே தலை சிறந்தது என அறிவுரை பகர்கிறான். வள்ளுவர் கள்ளுண்ணாமை என்னும் அதிகாரத்தையே படைத்துள்ளார் இதில் கள்ளுண்பவர்களை நஞ்சுண்பவர் எனவும், இறந்தவருக்கு ஈடாவர் என்றும் கூறுவதை,

“துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்

நஞ்சுண்பார் கள்ளுண் பவர்” (குறள் 926)

இத்தகைய மரணத்தை விளைவிக்கும், குடும்பத்தையே அழிக்கும் கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் கேடு என்பதனை உணர்ந்த சாத்தனார் அன்றே உணர்ந்து இதனை பதிவு செய்துள்ளார்.

பிற உயிர்களை கொல்லுதல் கூடாது என்பது அறநெறிக் கொள்கை. வள்ளலாரோ ஒருபடி மேலேசென்று ‘வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன்’ என்கிறார். சாதுவன் புலால் வேண்டேன் என மறுத்து குறுமகனிடம் கூறுகிறான் புலால் மறுப்பதை குறளும்

“உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு” (குறள்245) உரைக்கிறது.

பிறஉயிர்களை கொல்லக் கூடாதென்பதனை, ஆ புத்திரன் வேள்வியில் பலியிட வைத்திருக்கும் பசுவினை காப்பாற்றி அழைத்துச் செல்வதனை,

“அஞ்சிநின்று அழைக்கும் ஆத்துயர் கண்டு

நெஞ்சு நடுக்குற்று நெடுங்கணீர் உகுத்துக்

கள்ள வினையிற் கடுந்துயர் பாழ்பட

நள்ளிருட் கொண்டு நடக்குவன்” (ஆ புத்திரன் திறம் அறிவித்த காதை33 36)

என்பதனைக் காண முடிகிறது.

## சிறைக் கோட்டத்தை அறக்கோட்ட மாக்கல்

‘அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்’ என்பது பழமொழி தவறுகளுக்கு மரண தண்டனை வழங்கும் அக்காலத்திலேயே சிறைச் சாலையே கூடாது அதனை அறைச்சாலையாக மாற்றுகிறாள் என்பதனை,

“சிறையோர்ர் கூட்டம்சீத்து அருள் நெஞ்சத்து

அறவோர் காக்கும் அதுவாழியா என

அருஞ்சிறை விட்டாங்கு ஆயிளை உரைத்த

பெருந்தவர் தம்மாற பெரும் பொருள்எய்த

கறை யோரில்லா சிறையோர் கோட்டம்

“அறவோர்க்கு ஆக்கினன்”

(சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆகிய காதை 157 162)

என்பதை காண முடிகிறது. ‘இன்னா செய்தாரை ஒறுத்தல்’ என்னும் குறள் நெறியின்படி தனது மகனின் இறப்புக்கு காரணமாகிய பெண்ணே அரசனுக்கு அறிவுரை கூறின் சிறையில்லா நாட்டினை அமைப்பது புதுமை படைப்பாக இருக்கிறது.

## நல்வினைதீவினை

‘ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்’ என்பது சிலம்பு ஊழ்வினை குறித்து பலவாறு இலக்கியங்கள் கூறினாலும் மணிமேகலை,

“பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்

உறங்களும் விழித்தலும் போன்றது உண்மையின்

நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்

அல்லறம் செய்வோர் அருநர கடைத்தலும்

உண்டென உணர்தலின் உரவவோர் களைந்தனர்”

(ஆதிரை பிச்சை யிட்ட காதை 86 90)

இவ்வுலகில் உயிர்கள் பிறப்பதும் இறப்பதும் விழித்ததும் உறக்கமும் போன்றுதான் அதனால் வாழும் காலத்திலேயே வாழும் குறுகிய காலத்திலேயே நல்ல அறங்களை செய்வதே நலம் பயக்கும் என்று இயல்பாக கூறி இங்கு புதுமை படைத்துள்ளார் சாத்தனார்.

## முடிவுரை

காப்பிய தலைவி யாகியாகிய மணிமேகலை நடத்தும் ஒவ்வொரு நிகழ்வுகளும் புதுமையாகவும் சிந்திக்கத்தக்கதாகவும் இருக்கிறது. ஆகவே தேவையானவற்றை வாழ்வில் கடைபிடித்து தேவையற்றவற்றை விலக்கி அறவழி வாழ்ந்து வீடுபேறடைய வலியுறுத்தும் ஒரு புதுமை காப்பியம் மணிமேகலை என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை

## References

(2004 ) சங்க இலக்கியம் புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை

இளம்பூரணர், (2005) தொல்காப்பிய பொருள் அதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை

பாரதியார், பாரதியார் கவிதைகள், ஸ்ரீசுப்பிரமணிய பாரதி பதிப்பகம், சென்னை

புலியூர் கேசிகன், (2013) மணிமேகலை ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை

லட்சுமணன், பா.ஆ., (2018) திருக்குறள் உமா பதிப்பகம் சென்னை ஒன்றுபதிப்புஜூன்

வேங்கடசாமி நாட்டார் (2005) சிலப்பதிகாரம் மதுரை காண்டம் சாரதா பதிப்பகம் சென்னை

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License